பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 11 திங்கட்கிழமை 26.12.2022 கதிர் 302

## மன்னாரில் மீனவர்கள் 2 பேரைக் காணவில்லை

(ந.லோகதயாளன்)

மன்னார்க் கடலில் மீன்பிடிக்கச் சென்ற இரு மீனவர்களைக் காணவில்லை என்று மாவட்ட கடற்றொழில் திணைக்களத்துக்கு அறிவிக் கப்பட்டுள்ளது.

மன்னார் சிலாவத்துறையிலிருந்து 2

# ஆழிப்பேரலையின் 18 ஆம் ஆண்டு நினைவேந்தல் ஆறாத்துயரில் உறவுகள் ஒப்பாரி வைத்து அழுகை

### யாழில் உடுத்துறையில் பிரதான நிகழ்வு





ஆழிப்பேரலை பேரனர்த்தம் ஏற்பட்டு 18 ஆண்டுகள் கடந்தும் ஆறாத்துயரில் உறவுகள் இன்று ஒப்பாரி வைத்து அழுத காட்சி அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தது.

கடந்த 2004ஆம் ஆண்டு 'சுனாமி' எனும் ஆழிப்பேரலை ஏற்பட்டதன் காரணமாக பல் லாயிரக்கணக்கான உயிர்கள் காவுகொள்ளப்பட்டன.

அதன் 18 ஆம் ஆண்டு நினை வேந்தல் தமிழர் தாயக மான வடக்கு, கிழக்கு உள்ளிட்ட நாடெங்கும் 2

# குடும்பத்தோடு அமெ. பறந்தார் கோட்டாபய

கொழும்பு,டிசம்பர்26

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்பத்தினர் இன்று காலை டுபாய் ஊடாக அமெரிக்கா சென்றுள்ளனர் என பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய அதி காரிகள் தெரிவித்துள்ளனர். 2



## தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் ஒன்றிணைவுக்குச் சம்பந்தன் வரவேற்பு



தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலை வர்கள் யாழ்ப்பாணத்தில் ஒன்றுகூடி கதைத்தமை வரவேற்கத்தக்க விடயம். இது மகிழ்ச்சியான செய்தி. உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஒன்றாகக் கள மிறங் குவது தொடர்பில் நாம் அனைவருடனும் கலந்துரையாடி இறுதி முடிவெடுப்போம். இதனைவிட மேலதிகமாக எதையும் கூறி இந்த முயற்சியை நான் குழப்ப விரும் பவில்லை.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் 2

## வவுனியாவில் நினைவேந்தல்




(வவுனியா நிருபர்)

வவுனியா, பூந்தோட்டம் நரசிங்கர் ஆலயம் மற்றும் வவுனியா நகர சபையின் ஏற் பாட்டில்சுனாமிப்பேரலையில் உயிர் நீத்தவர்களுக்கான 18ஆம் ஆண்டு அஞ்சலி நிகழ்வு இன்று இடம்பெற்றது.

பூந்தோட்டம் லயன்ஸ் விளையாட்டுகழக மைதான வளாகத்தில் அமைந்துள்ள சுனாமி நினைவுத் தூபியில் இந்தப் பிரார்த்தனை நிகழ்வு நடைபெற்றது. 8

## புதிய வகை போதை மாத்திரை வடக்கு மாகாணத்தில் பாவனை

### பாதுகாப்புத் தரப்பினர் மீது குற்றச்சாட்டு

வடக்கில் மருத்துவத் தேவைக்காகப் பயன்படுத்தப் படும் மருந்துகளை உயிர் கொல்லிபோதைப்பொருளாகப் பயன்படுத்தும் கலாசாரம் வேரூன்றி வருவதாகத் தெரி விக்கப்படுகின்றது. பாதுகாப்புத் தரப்பினரே இவ்வாறான செயற்பாட்டுக்கு முன்னோடி யாக இருப்பதாகவும் குற்றம் சுமத்தப்படுகின்றது.

வடக்கில் கடந்த சில மாதங் களுக்குமுன்னர்உயிர்கொல்லி போதை மாத்திரைகளுடன் பலர் கைது செய்யப்பட்டனர். அவர் கள் கைவசம் வைத்திருந்த மாத் திரைகள், மருத்துவத் தேவைக்குவலிநிவாரணியாகப் பயன்படுத்தப்பட்டுவந்தன. இந்த நிலையில் அவற்றை உயிர் கொல்லி போதை மாத்திரை யாக பலர் பயன்படுத்தினர். 2

## மகேசனுக்கு இடமாற்றம்?



யாழ்ப்பாணம் மாவட்ட செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் எதிர்வரும் ஜனவரி மாதம்முதல் இடமாற்றம்பெற்றுச் செல்லவுள்ளார் எனத் தகவல் கள் வெளியாகியுள்ளன. 2

## திருமலையில் நினைவேந்தல்

திருகோணமலை வெரு கல் முகத்துவார கிராம அபிவிருத்தி சங்கத்தினரும், ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையினரும் இணைந்து இன்று காலை 9.30 மணிக்கு ஆலய முன் றலில், சுனாமிப் பேரலையில் உயிர்நீத்த உறவுகளை நினைவுகூர்ந்து உருவப் படங்களுக்கு சுடரேற்றிய துடன் விசேட பூஜை வழி பாட்டையும் நடத்தினர்.

இந்த நிகழ்வில் 8




## தமிழ்த் தேசியக் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரனின் இல்லத்தில்

## மகேசனுக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட செயலர்களுக்கான இடமாற்றத்துக்கு அமைவாக அவர் மாற்றலாகிச் செல்லவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இராஜாங்க அமைச்சு ஒன்றின் செயலாளராக அவர் இடமாற்றம் பெற்றுச் செல்லக் கூடும் எனத் தெரிய வருகின்றது.

2020ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மாவட்டச் செயலராகக் கடமையாற்றிய நா.வேதநாயகன், அரசியல் ரீதியான பழிவாங்கலால் இடமாற்றத்துக்குள்ளாக்கப்பட்ட நிலையில், அவர் ஓய்வு பெற்றிருந்தார். இந்தநிலையில், மாவட்ட செயலராக க.மகேசன் 2020ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி கடமைகளைப் பொறுப்பேற்று, கொரோனாப் பெருந்தொற்றுக்காலம், பொருளாதார நெருக்கடி நிலை போன்ற இக்கட்டான சூழ்நிலைகளில் மிகச்சிறப்பான பணியை யாழ்.மாவட்டத்துக்கு ஆற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு புதிய செயலராக, தற்போது கிளிநொச்சி மாவட்ட செயலராகவுள்ள திருமதி ரூபவதி கேதீஸ்வரன் நியமிக்கப்படவுள்ளார் என்றும் அறியமுடிகின்றது.

## மன்னாரில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன்தினம் ஒரு படகில் மீன்பிடிக்கச் சென்ற 20 வயது மற்றும் 23 வயது இளைஞர்களே காணாமல்போயுள்ளனர்.

அவர்களைத் தேடும் பணியில் கடற்படையினருடன் இணைந்து சக மீனவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர் நேற்றுமுன்தினம் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியிருந்தனர். இது தொடர்பில் கூட்டமைப்பின் தலைவரின் நிலைப்பாட்டை கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் தீர்வு, ஜனாதிபதியுடனான பேச்சு, உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக அறிந்தேன். இன்னும் பல விடயங்களை அவர்கள் கதைத்திருக்கக் கூடும்.

அரசியல் தீர்வு தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் ஒரு நிலைப்பாட்டிலேயே உள்ளன. அதே வேளை ஜனாதிபதியுடனான பேச்சும் தமிழர் அபிலாசைகளை வெல்லக் கூடியதாக இருக்கவேண்டும் என்பதுதான் தமிழ்த் தேசியக் கட்சிகளின் நிலைப்பாடு.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றாகப் போட்டியிடுவது அதிக நன்மை என்ற விடயமும் கலந்துரையாடப்பட்டுள்ளது. இது பேச்சளவில் உள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிகள் இது தொடர்பில் கலந்துரையாடி இறுதி முடிவு எடுப்பார்கள். ஏனைய தமிழ்க் கட்சிகளுடனும் கலந்துரையாடி இறுதி முடிவு எடுப்போம். இதனை விட மேலதிகமான கருத்துக்களை வெளியிட்டு குழப்ப விரும்பவில்லை – என்றார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராஜா, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன், புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந.சிறீகாந்தா மற்றும் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சந்திப்பில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது

## குடும்பத்தோடு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் ஜனாதிபதியுடன் மனைவி அயோமா ராஜபக்ஷ மற்றும் அவர்களது மகன் மனோர் ராஜபக்ஷ, மருமகள் மற்றும் பேத்தி ஆகியோரும் சென்றிருந்தனர். அதிகாலை 2.55 மணிக்கு அவர்கள் எமிரேட்ஸ் விமானத்தில் புறப்பட்டனர்.

ஜனாதிபதி பதவியைத் துறந்த பின்னர் கோட்டாபய ராஜபக்ஷ உடனடியாக அமெரிக்காவுக்குச் செல்ல முயற்சித்தும் முடியாதிருந்தார் என்பது தெரிந்ததே.

## ஆழிப் பேரலையின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுஷ்டிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அதிகமான உயிர்கள் காவுகொள்ளப்பட்ட வடமராட்சி கிழக்கில் பிரதான நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

அங்கு சுமார் ஆயிரத்து முப்பத்து எட்டு பேர் சுனாமி அனர்த்தத்தில் காவுகொள்ளப்பட்டனர்.

பிரதான நிகழ்வு உடுத்துறை சுனாமி பொது நினைவாலயத்தில் நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

உறவினர்களின் கண்ணீர் கதறல்களுக்கு மத்தியில் உணர்வுபூர்வமாக நிகழ்வு நடைபெற்றது.

பிரதான நினைவுத் தூபிக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் அ.சா. அரியமார், பளை பிரதேச சபைத் தலைவர் சுரேன், மருதங்கேணி பிரதேச செயலர் பி. பிரபாகரமூர்த்தி ஆகியோர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

மருதங்கேணி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தேசியக்கொடியை ஏற்றிவைக்கப் பொதுச்சுடரை மருதங்கேணி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏற்றிவைத்தார்.

அதனைத் தொடர்ந்து உடலங்கள் புதைக்கப்பட்ட இடங்களில் அவர்களின் உறவினர்கள் தீபம் ஏற்றி மலர் அஞ்சலி செலுத்தியதுடன் அவர்கள் விரும்பி உண்ணும் உணவுகளைப் படைத்து ஒப்பாரி வைத்து ஓலம் இட்டனர். இதனால் அப்பகுதி எங்கும் சோகமயமாகக் காட்சி அளித்தது.

இதேவேளை, அனர்த்தத்தில் உயிரிழந்தபலரைஅடக்கம்செய்யப்பட்ட உடுத்துறை 10 ஆம் வட்டாரம், வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, மணல்காடு ஆகிய இடங்களிலும் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

வடமராட்சி வடக்குப் பிரதேசத்தில் தும்பளை, கிராமக்கோடு ஆகிய இடங்களிலும் நினைவேந்தல் நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக நடைபெற்றன.

## புதியவகை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த நவம்பர் மாதம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அபாயகர ஔடதங்கள் சட்டத்தின் ஊடாக அத்தகைய வலி நிவாரணிகள் ஆபத்தான உயிர்கொல்லி போதைப்பொருள்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றை மருந்தகங்களில் விற்பனை செய்யவும் முடியாது.

இந்தநிலையில் அவற்றுக்குப் பதிலாக மனநோய்க்கு நிவாரணியாகப் பயன்படுத்தப்படும் மருந்தை, போதைப்பொருளாக சிலர் உபயோகித்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

படையினரே ஆரம்பத்தில் இதனை மருந்தகங்களிலிருந்து அதிகளவு கொள்வனவு செய்துள்ளமையும் தெரியவந்துள்ளது.

தற்போது வடக்கில் பல இளைஞர்கள் இந்த மருந்தை உயிர்கொல்லி போதைப்பொருளாகப் பயன்படுத்துகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.




காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இந்தியாவின் பங்களிப்பு

மீண்டும் ஒரு தடவை இப்பத்தியில் அதே வாசகத்தைக் கூற வேண்டி உள்ளது. அது – 'கணக்குப்பிள்ளை பேசக்கூடாது; கணக்கு புத்தகம் பேச வேண்டும்!' என்பதுதான்.

நமது தமிழர் அரசியலில் பல சமயங்களில் கணக்குப் பிள்ளைகள்தான் அதிகம் பேசுகின்றனர். ஆனால் கணக்குப் புத்தகமும் வேறு விதமாகப் பதிவுகளைக் கொண்டிருக்கின்றது. கணக்குப் பிள்ளைகள் விடும் 'கணக்குகள்'தான் அதிகமாக உள்ளன.

இப்போது கூட தேசிய இனப் பிரச்சனைக்கான தீர்வு தொடர்பில் இந்தியாவின் பங்களிப்புத் தொடரும் என்ற கூட்டமைப்புத் தலைவர் இரா. சம்பந்தனின் பேச்சு வெறும் கணக்குப் பிள்ளை விடும் கணக்குப் போலவே தோன்றுகின்றது. உண்மைக் கணக்கு நிலைவரம் அப்படி இல்லை என்பதுதான் பேச்சில் பங்குபற்றும் தமிழ் தலைவர்கள் பலரினதும் கருத்து நிலைப்பாடு என்பதும் மறுக்க முடியாத உண்மை.

அந்தப் பேச்சுக்களில் தமிழர் தரப்பில் பங்குபற்றும் நீதியரசர் விக்னேஸ்வரன், சித்தார்த்தன், செல்வம் போன்றோர் இலங்கை விடயத்தில் இன்னும் அதீத பங்களிப்புடன் கூடிய இந்திய ஈடுபாட்டை எதிர்பார்க்கின்றனர்; வலியுறுத்துகின்றனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலாதன். யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஶ்ரீதரன் போன்றோர் கூட அந்த நிலைமையையே – இந்தியாவின் நேரடி மற்றும் கூடுதல் பங்களிப்பையே – வலியுறுத்துகின்றனர்

1980 களின் முற்பகுதியில் இருந்து இலங்கை விடயத்தில் இந்தியா கரிசனை காட்டி வருகின்றது, 1987 இல் இலங்கைத் தமிழர்களுக்காக இந்திய – இலங்கை ஒப்பந்தமும், அதனைத் தொடர்ந்து அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தமும் ஏற்பட்டமை தொடர்பில் இப்போது சம்பந்தன் கூறும் நீண்ட வியாக்கியானம் எல்லோருக்கும் தெரிந்ததுதான். அதில் புதிதாக ஒன்றும் இல்லை.

ஆனால், இப்போது இந்தியாவில் பங்களிப்பு – ஈடுபாடு – எவ்வாறு உள்ளது என்பதுதான் கேள்வி.

2015 இல் இருந்து 2019 வரை, நல்லாட்சி அரசின் கீழ், நேரடியாகத் தீர்வு முயற்சியில் ஈடுபட்ட சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்புத் தரப்பு, இந்தியாவின் பங்களிப்பை அப்போது பெரிய அளவில் உள்வாங்காமலேயே நேரடியாகக் கொழும்புடன் தீர்வை பெற்றுக் கொள்ள நம்பி இறங்கி, கடைசியில் வாங்கி கட்டிக் கொண்டது.

அதற்குப் பின்னர் தீர்வு முயற்சியில் இந்தியாவின் பங்களிப்பு இன்னும் ஆக்கபூர்வமானதாக உள்வாங்கப்படவில்லை என்பதுதான் உண்மை. அதற்கான முன் முயற்சிகளை தளராது தமிழர் தரப்பு முன்னெடுப்பது – அதன் – தமிழர் தரப்பின் – வலிமைக்கு மிக முக்கியமானது.



## யாழ். பல்கலையில் இடம்பெற்ற மார்கழிப் பெருவிழா நிகழ்வுகள்!

யாழ்.பல்கலைக்கழகத்தின் சைவசித்தாந்தத் துறையும் தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தின் சைவ மாணவர் சபையும் இணைந்து நடத்திய மார்கழிப் பெருவிழா யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) யாழ்.பல்கலைக்கழகத்தினுள் அமைந்துள்ள ஶ்ரீ பரமேஸ்வரன் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட வழிபாடுகளைத் தொடர்ந்து, தேவாரத் திருமுறையுடன் சைவக் குரவர்கள் நால்வரும் எழுந்தருள கைலாசபதி அரங்கில் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக சைவசித்தாந்தத் துறை தலைவர் கலாநிதி பொன்னுத்துரை சந்திரசேகரம் தொடக்க உரையையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சற்குணராசா வாழ்த்துரையையும் ஆற்றினர். அத்துடன், திருமுறை விண்ணப்பம், சிறப்புரை, கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் தமிழகத்திலிருந்து துறைசார் சான்றோர்களான அண்ணாமலைப் பல்கலைக்கழக தேவார உதவிப் பேராசிரியர் முனைவர் திருஞான.பாலச்சந்திரன் ஓதுவார் மற்றும் தருமை ஆதீனப் புலவர் சிவத்திரு. எம்.கே.பிரபாகரமூர்த்தி ஆகியோர் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பு மாவட்டத்தில் உணர்வுபூர்வமாக நடந்த ஆழிபேரழிவின் 18 ஆவது ஆண்டு நிகழ்வு!



சுனாமி காவுகொண்ட 18 ஆவது ஆண்டு நினைவு நாடெங்கிலும் இன்று காலை உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

அந்த நிலையில் இன்று (திங்கட்கிழமை) மட்டக்களப்பு மாவட்டத்தில் சுனாமி அனர்த்தம் காரணமாக 2 ஆயிரத்து 800 இற்கும் மேற்பட்டவர்கள் காவுகொள்ளப்பட்ட நிலையில் நினைவுகூரும் வகையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

இதற்கமைய மட்டக்களப்பு – அம்பாறை மறை மாவட்ட ஆயர் பொன்னையா ஜோசப் ஆண்டகையால் விசேட பூஜைகள் நடாத்தப்பட்டதுடன் ஈகச்சுடர் ஏற்றப்பட்டு கண்ணீருடன் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது உயிர்நீர்த்தவர்களின் புகைப்படங்கள் அடங்கிய தொகுப்பு காட்சிப்படுத்தப்பட்டிருந்ததுடன் உயிர்நீர்த்தவர்களின் உறவினர்கள் உறவுகளின் புகைப்படங்களுக்கு மலர் தூவி கண்ணீருடன் அஞ்சலி செலுத்தினார்கள்.

மேற்படி அஞ்சலி நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தன், முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களான இரா. துரைரெட்னம், பிரசன்னா இந்திரகுமார், பிரசாந்தன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## 16 ஆவது கெமுனு இராணுவப் படையினரால் சிறார்களுக்கு பரிசுப் பொருள்கள் அன்பளிப்பு!



நத்தார் தினத்தை முன்னிட்டு இளவாலை புனித அன்னாள் தேவாலயத்தில் சிறார்களுக்கு பரிசுப் பொருள்கள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) 16 ஆவது கெமுனு இராணுவப் படையினரால் இந்த நிகழ்வு ஏற்படாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது கெமுனு இராணுவப் படையினரால் 100 சிறார்களுக்கு பரிசுப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பங்குத் தந்தை எரிக் ரொஹான், 16 ஆவது கெமுனு படைப்பிரிவு இராணுவத்தினர், சிறார்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# 2100 ஆம் ஆண்டில் எம்பெரர் பெங்குவின் அண்டார்டிகவில் முற்றாக அழிவுறும் நிலை



பெரிய அளவிலான பாதுகாப்பு முயற்சிகள் மேற்கொள்ளாவிட்டால் அண்டார்டிகாவில் உள்ள 97 சதவிகித நிலம் சார்ந்த உரியினங்களின் எண்ணிக்கை 2100 ஆம் ஆண்டில் வெகுவாக குறைந்து விடும் என ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

குயீன்ஸ்லாந்து பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்ட ஆய்வில் இந்த அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது. ஆண்டுக்கு 23 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிட்டால் அண்டார்டிகாவில் உள்ள உயிரினங்களை பாதுகாக்கலாம் எனவும் அந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த ஆய்வில் கூறியிருப்பதாவது: –

சிறிய அளவிலான தொகையினை ஆண்டுக்கு ஒரு முறை தொடர்ந்து செலவு செய்து வந்தால் அண்டார்டிகாவில் உள்ள 84 சதவிகித நிலவாழ் பறவைகள், உயிரினங்கள் மற்றும் தாவர குழுக்கள் காப்பாற்றப்படும். பருவநிலை மாற்றம் அண்டார்டிகாவில் உள்ள தாவரங்கள் மற்றும் விலங்குகளுக்கு மிகப் பெரிய அச்சுறுத்தலாக உருவெடுத்து வருகிறது. பருவநிலை மாற்றத்தை குறைக்கும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். அண்டார்டிகாவில் உள்ள உயிரினங்கள் மிகவும் குளிரான, அதிக காற்று போன்றவற்றைத் தாங்கி வாழ்வதற்கு ஏற்ப தங்களை மாற்றிக் கொண்டுள்ளன. உரிய கவனம் கொடுக்கப்படாவிட்டால் அண்டார்டிகாவில் உள்ள பெங்குவின் உட்பட பல உயிரினங்கள் அழிந்து போகும் அபாயம் உள்ளது. மனித குலத்துக்கு விலைமதிப்பற்ற சேவைகளை அண்டார்டிகா வழங்கி வருகிறது. உலக பருவநிலையை சம நிலையில் வைப்பதற்கு அண்டார்டிகா பெரிதும் உதவுகிறது. அண்டார்டிகா வெப்பம் மற்றும் கரியமில வாயுவை உள்வாங்கிக் கொண்டும் உதவி புரிகிறது. நம்மில் பலர் அண்டார்டிகா சில உயிரினங்களுக்கு மிகவும் பாதுகாப்பான வாழிடமாக இருப்பதாக நினைக்கிறோம். ஆனால், அண்டார்டிகாவில் உள்ள உயிரினங்கள் பல பிரச்னைகளை சந்தித்தும், அழிவை நோக்கி நகர்ந்தும் வருகின்றன. உலக பருவநிலை மாற்றத்தினால் அண்டார்டிகாவில் உள்ள பனி தொடர்ந்து உருகி வருகிறது. இதனால், அண்டார்டிகாவில் உள்ள பனி நிலப்பரப்பு குறைந்து வருகிறது. அனல் காற்று போன்றவை அண்டார்டிகாவில் வீச ஆரம்பித்துள்ளது.

# ஆற்றுக்குள் பாய்ந்த பஸ் ஸ்பெயினில் அறுவர் சாவு

ஸ்பெயின்ஸ்பெயின் நாட்டின் வடமேற்கு பகுதியில் உள்ள பொன்டேவேத்ரா மாகாணம் செர்டெடோ-கோடோபேட் நகரில் சாலையில் சென்று கொண்டிருந்த பஸ் ஒன்று, திடீரென டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து, சாலையோரம் உள்ள ஆற்றுக்குள் பாய்ந்தது. இந்த கோர விபத்தில் பஸ்ஸில் பயணம் செய்த 6 பேர் பலியாகினர். 3 படுகாயம் அடைந்தனர். இந்த விபத்து குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.



# அமெரிக்காவை வதைக்கும் ‘வெடிகுண்டு’ப் பனிப்புயல்!



வொஷிங்டன், டிச.26

அமெரிக்காவை வாட்டும் 'வெடிகுண்டு'பனிப் புயலால் மனித உயிரிழப்பு 39 ஆக அதிகரித்து உள்ளது. கிறிஸ்துமஸ் நாளில் மக்கள் வீடுகளில் முடங்கினர்.

அமெரிக்காவில் கடுமையாக வீசும் வெடிகுண்டு பனிப்புயலால் மக்களின் இயல்புவாழ்க்கை முற்றிலும் முடங்கிப்போய் உள்ளது. பனிப்புயல் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 39 ஆக உயர்ந்து உள்ளது.

கிறிஸ்துமஸ், புத்தாண்டு விடுமுறையை கொண்டாட திட்டமிட்டு இருந்த மக்கள் பலரும் தங்களின் வீடுகளிலோ முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

மேற்கு நியூயார்க்கின் சில பகுதிகள் 43 அங்குல பனியால் மூடப்பட்டு உள்ளன. இதனால் ஆயிரக்கணக்கான வாகனங்கள் சிக்கி மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளன. அமெரிக்காவின் பல்வேறு பகுதிகளிலும் மணிக்கு 64கி.மீ வேகத்தில் பலத்த காற்று வீசுகிறது.

இதனால் சாலைகளில் பனி கட்டிகள் குவிந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் 48 மாகாணங்களில் 4 முதல் 6 அடி உயரத்திற்கு பனிக்கட்டிகள் குவிந்து கிடப்பதால் மைனஸ் டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாகி உறையவைத்துள்ளது. இந்நிலையில், கடும் 5 நாள்களாக கடுமையாக வாட்டி வந்த பனிப்பொழிவும், பனி புயலும் படிப்படியாக குறையு மென்று அந்நாட்டு வானிலை ஆய்வாளர்கள் கணித்துள்ளனர்.

# கால்பந்து ஜாம்பவான் பீலே வைத்தியசாலையில் சேர்ப்பு



பிரேசில் கால்பந்து ஜாம்பவான் 82 வயதான பீலே உடல் நலக்குறைவால் பிரேசில் நாட்டின் சாவ் பாலோவில் உள்ள ஆஸ்பத்திரியில் கடந்த மாதம் இறுதியில் அனுமதிக்கப்பட்டார். மூச்சு திணறலால் அவதிப்பட்ட அவருக்கு கொரோனா தொற்று இருப்பது தெரிய வந்தது. ஏற்கனவே பெருங்குடலில் புற்றுநோய் கட்டி அகற்றப்பட்டது. அதன் தாக்கமும் குறையாமல் உடலில் சில பாகங்களுக்கு பரவியுள்ளது. சிறுநீரம், இதயம் சார்ந்த பிரச்சினைகளும் உள்ளன. இதனால் அவரது உடல்நிலை மிகவும் பலவீனமடைந்து மோசமான நிலையில் இருப்பதாக கூறப்படுகிறது. இருப்பினும் அவரது உடல் நிலை குறித்து மருத்துவமனை சார்பில் சமீபத்தில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. டாக்டர்கள் 24 மணி நேரமும் தொடர்ந்து சிகிச்சை அளித்து வருகிறார்கள். இந்த நிலையில் அவரது குடும்பத்தினர் நேற்று முன்தினம் சாவ் பாலோ ஆஸ்பத்திரியில் குவிந்ததமையால் பரபரப்பு ஏற்பட்டது. கிறிஸ்துமஸ் பண்டிகையையொட்டி பீலே உடன் நேரத்தை செலவிடுவதற்காக அங்கு சென்றுள்ளனர்.

இதற்கிடையே, படுத்தநிலையில் உள்ள தனது தந்தையை மார்போடு அணைத்தபடி அவரது மகள் கெலி நசிமென்டோ இன்ஸ்டாகிராம் பக்கத்தில் உணர்வுபூர்வமான புகைப்படம் ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் 'போராட்டத்திலும், நம்பிக்கையிலும், நாங்கள் தொடர்ந்து இருக்கிறோம். மற்றொரு இரவில் ஒன்றிணைந்துள்ளோம்' என்று குறிப்பிட்டுள்ளார்.

# கிறிஸ்ஸ் தினத்தை ஒட்டி சவுதியில் மரணதண்டனை



இங்கிலாந்து, டிச.26

கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு சவுதி அரேபியாவில் மரண தண்டனை நிறைவேற்றப்படுகிறது என பிரிட்டிஷ் எம்.பி அதிர்ச்சியான தகவலை தெரிவித்துள்ளனர்.

உலகம் முழுவதும் கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்கள் நடந்து வருகின்றன. இதனையொட்டி பல குற்றவாளிகளுக்கு மரண தண்டனையை நிறைவேற்ற சவுதி அரேபியா திட்டமிட்டுள்ளது என இங்கிலாந்து எம்.பி.க்கள் குழு வெளியுறவு செயலாளர் ஜேம்ஸ் கிளவர்லிக்கு கடிதம் எழுதியதாக 'தி டெலிகிராப்' தெரிவித்துள்ளது. ஹிலாரி பென், டேவிட் டேவிஸ், ஆண்டி ஸ்லாட்டர், சர் பீட்டர் பாட்டம்லி மற்றும் அலிஸ்டர் கார்மைக்கேல் ஆகியோர் அந்த கடிதத்தில் கையெழுத்திட்டு உள்ளனர்.

அந்தக் கடிதத்தில் –

தாங்கள் தவறுகளை மறைக்க சவுதி அரேபிய அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர். உலக மக்களின் கவனம் வேறு திசையில் இருக்கும் போது இதனை நிறைவேற்ற திட்டமிட்டு உள்ளனர். இதனால் சவுதி அதிகாரிகள் குறைந்த இராஜதந்திர பின்னடைவை சந்திக்க நேரிடும். சவுதி அரேபியா விடுமுறை காலத்தில் சவூதி அரேபியா வெகுஜன மரணதண்டனைகளை நிறைவேற்றக்கூடும் என நாங்கள் மிகவும் கவலைப்படுகிறோம். பண்டிகை மற்றும் புத்தாண்டு காலங்களில் சர்வதேச சமூகம் விரைவாக பதிலளிப்பது கடினமாக இருக்கும் போது 2016 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் மரணதண்டனைகளை நிறைவேற்றிய வரலாற்றை சவுதிஅரேபியா கொண்டுள்ளது. இது முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது என்பதைத் தெரிவிக்க, விடுமுறைக்கு முன்னதாகவே வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க நாங்கள் உங்களை வலியுறுத்துகிறோம் என அதில் கூறப்பட்டு உள்ளது. கடந்த இரண்டு வாரங்களில் சவுதி அரேபியாவில் 20 பேர் தூக்கிலிடப்பட்டுள்ளனர் எனவும், அவர்களில் 12 பேர் வெளிநாட்டவர்கள் எனவும் வெளியுறவு செயலருக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிபா உலகக் கோப்பை 2022 இல் உலகமே ஆர்வத்துடன் இருந்த வேளையில் சவுதி இந்த மரண தண்டனைகளை நிறைவேற்ற முடிவு செய்ததாக இங்கிலாந்து எம்.பி.க்கள் தெரிவித்துள்ளனர்.

காலைக்கதிர் மாலைப்பதிப்பு Kalaikkathir



# அருணாசல பிரதேசத்திற்குள் சீனா அடிக்கடி ஊடுருவுவது அரிய வகை மூலிகைக்காகவா?

## வெளியாகியுள்ள அதிர்ச்சி அறிக்கை



அருணாசல பிரதேசத்தில் விலையுயர்ந்த அரிய வகை மூலிகைக்காகவே சீனா ஊடுருவி உள்ளது என அறிக்கை தெரிவிக்கின்றது.

இமயமலை பகுதிகளில் 3 ஆயிரம் முதல் 5 ஆயிரம் அடி உயரத்தில் கார்டிசெப்ஸ் பங்கஸ் என்ற பெயரிலான அரிய வகை மூலிகைகள் வளர்ந்து காணப்படுகின்றன. தென்மேற்கு சீனாவிலும் இவை உள்ளன. இமயமலையின் தங்கம் என அழைக்கப்படும் இந்த அரிய மூலிகை விலைமதிப்பற்றது. தங்கத்தின் மதிப்பை விட விலை அதிகம் கொண்டது. இந்த அரிய வகை மூலிகையானது இந்தியாவில் கிடா ஜதி என்றும் நேபாளம் மற்றும் சீனாவில் யார்சாகும்பா என்றும் திபெத்தில் யார்சாகன்பு என்றும் அழைக்கப் படுகிறது. இந்த மூலிகை பட்டாம்பூச்சியின் கூட்டுப்புழு போன்ற தோற்றம் கொண்ட நிலையில், ஆங்கிலத்தில் இதனை கேட்டர்பில் லர் பங்கஸ் என்றும் அழைக்கின்றனர்.

சர்வதேச சந்தையில் ஒரு கிலோ ரூ.10 முதல் ரூ.12 லட்சம் விலை மதிப்பு கொண்டது. சர்வதேச அளவில் 2022 ஆம் ஆண்டில் ரூ.8,859.81 லட்சம் கோடி அளவுக்கு சந்தையில் இந்த மூலிகை விலை போயுள்ளது. சீனாவில் இதற்கு தேவை அதிகரித்து உள்ளது. இதனை அதிகளவில் உற்பத்தி செய்து, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியும் செய்து வருகிறது. கடந்த சில ஆண்டுகளாக சீனாவில் இதன் விளைச்சல் குறைந்து, பற்றாக்குறை ஏற்பட்டு உள்ளது. இதனால், இந்த மூலிகையை தேடி, அருணாசல பிரதேசத்தில் சட்டவிரோத ஊடுருவலில் சீன வீரர்கள் ஈடுபட்டு உள்ளனர் என்ற குற்றச்சாட்டும் எழுந்துள்ளது. இதனை இந்தோ-பசிபிக் உயர்மட்ட தொலைதொடர்பு மையம் தெரிவித்து உள்ளது. கடந்த சில ஆண்டுகளாக சீனாவில் இதன் விளைச்சல் குறைந்து உள்ளது. இதனால், பற்றாக்குறை ஏற்பட்டு உள்ளது. விளைச்சல் குறைவு, தேவை அதிகரிப்பு ஆகியவற்றால் அதிகளவில் அறுவடை செய்யப்பட்டு வந்துள்ளன. இந்த மூலிகையானது, ஆண்மை குறைவு உள்ளிட்ட பல உடல் சார்ந்த நோய்களை தீர்க்க கூடியது என சீன நடுத்தர வர்க்கத்தினர் இதனை அதிக அளவில் வாங்கினாலும் அதற் கான அறிவியல்பூர்வ சான்று கள் எதுவும் இல்லை.

இதற்காக சீன மூலிகை நிறு வனங்கள் சமீப ஆண்டுகளாக உள்ளூர்வாசிகளுக்கு கோடிக் கணக்கில் பணம் கொடுத்து மொத்த மலை பகுதியையும் இந்த மூலிகையை அறுவடை செய் வதற்காக ஆக்கிரமித்து உள்ளது. இந்நிலையிலேயே, சீனாவை ஒட்டிய இமயமலை பகுதியில் விளையும் தங்கத்தின் மதிப்பை விட அதிக விலையுயர்ந்த இந்த மூலிகையை தேடி சீன வீரர்கள் பல்வேறு முறை ஊடுருவ முயன் றுள்ளனர் என தெரிய வந்துள்ளது.

# மதமாற்றத்தில் ஈடுபட்ட இருவர் உ.பியில் கைது



லக்னோ,டிச.26

கட்டாய மதமாற்றம் செய்ய முயற்சித்ததாக மதபோதகர் உட்பட 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். உத்தரபிரதேச மாநிலம் ராம்பூர் மாவட்டத்தில் சொஹ்னா என்ற கிராமம் உள்ளது. இந்தக் கிராம த்தைச் சேர்ந்த இந்து மத மக்களை கிறிஸ்தவ மத போதகர் கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றம் செய்ய முயற்சித்தார் எனப் புகார் எழுந்தது.

மதபோதகர் பாலஸ் மனீஷ் நேற்று கிறிஸ்துமஸ் தினத்தன்று கிராமத்தை சேர்ந்த பட்டியலின மக்களை கிறிஸ்தவ மதத்திற்கு மாறும்படி வற்புறுத்தியுள்ளார். இது தொடர்பாக பொலிஸ் நிலையத் தில் புகார் அளிக்கப்பட்டது. புகாரின் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்த பொலிஸார், கிராம மக்களை கட்டாய மத மாற்றம் செய்ய முயற்சித்த மதபோதகர் பாலஸ் மனீஷ கைது செய்தனர்.

அதேபோல், அம்மாநிலத்தின் பாலியா மாவட்டம் திதலி கிராம த்தை சேர்ந்த ராம்நிவாஸ் என்ற நபர் இந்து மதத்தை சேர்ந்த கிராம மக்கள் சிலரை நேற்று கிறிஸ்தவ மதமாற்றம் செய்ய முயற்சித்துள் ளார். இது தொடர்பாக பொலிஸில் புகார் அளிக்கப்பட்ட நிலையில் ராம்நிவாசை பொலிஸார் கைது செய்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர். உத்தரபிரதேசத்தில் கட்டாய மத மாற்றம் தண்டனைக்குரிய குற்றமாகும். மக்களை கட்டாயப்படுத்தி மத மாற்றம் செய்தால் அதிகபட்சமாக 10 ஆண்டுகள் சிறையும், 50 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்படும் வகையில் மதமாற்ற தடை சட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்திய எல்லைக்குள் புகுந்த பாக் ட்ரோன் வீழ்த்தப்பட்டது






புதுடில்லி, டிச.26

இந்தியாவின் எல்லையில் அத்துமீறி இந்திய எல்லைக்குள் நுழைந்த பாகிஸ்தான் ட்ரோனை இந்தியா கைப்பற்றி விசாரணை நடந்து வருகின்றது.

பஞ்சாப் மாநிலம் அமிர்தசர் மாவட்டத்தில் கிறிஸ்துமஸ் தினத்தை முன்னிட்டு, பி.எஸ்.எவ். அதிகாரிகள், ரோந்து பணியில் ஈடுபட்ட போது, எதிர்பாராத விதமாக ஒரு வித்தி யாசமான சத்தம் கேட்டுள்ளது.

இது குறித்து தகவலறிந்து சென்ற பாதுகாப்பு படையினர், அங்கு பறந்து கொண்டிருந்த ட்ரோனை சுட்டு வீழ்த்தினர். இதையடுத்து ட்ரோனை மீட்டு விசாரணை நடத்தி வருகின்றனர்.

இது குறித்து பி.எஸ்.எவ். வீரர் கூறுகையில், நாங்கள் அதை வேலிக்கு அருகில் கண்டோம், அது கமராவுடன் கூடிய ட்ரோன். இது சீனாவில் தயாரிக்கப்பட்டது. நாங்கள் ட்ரோனை, சுட்டு இறுதியில் அதை மீட்டோம். அப்பகுதியில் இன்னும் தேடுதல்கள் நடந்து வருகின்றன. - இவ்வாறு அவர் கூறினார்.

கடந்த டிசம்பர் 21, நவம்பர் 26 போன்ற திகதி களில் கூட இது போன்ற அத்துமீறி நுழைந்த ட்ரோன்கள் கண்டுபிடிக்கப்பட்டு, விசாரணை நடந்து வருகிறது. இந்நிலையில், மூன்றாவதாக இந்த ட்ரோன் கண்டுபிடிக்கப்பட்டது பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

# நிர்மலா சீதாராமன் வைத்தியசாலையில்



புதுடெல்லி,டிச.26

மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமனுக்கு திடீரென உடல் நலக்குறைவு ஏற்பட்டதால் அவர் மருத்துவமனையில் அனும திக்கப்பட்டுள்ளார் எனத் தகவல் வெளியாகி உள்ளது. மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமனுக்கு இன்று காலை திடீர் உடல்நலக்குறைவு ஏற்பட்டது.

இதையடுத்து அவர் மதியம் 12 மணிக்கு டெல்லியில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என தகவல் வெளியாகி உள்ளது. 63 வயதாகும் அவருக்கு எதனால் உடல் நலக்குறைவு ஏற்பட்டது என்று அறிவிக்கப்படவில்லை. மருத்துவ மனையில் தனி வார்டில் அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# புகழ்பூத்த ஓவியர் பத்வாசனுக்குகௌரவம் ‘ஓவியவித்தகர்’, ‘ஓவியசாகரர்’ விருதுகள்







இந்து கலாச்சார திணைக்களத்தின் அழைப்பின் பேரில் இந்திய தமிழ்நாட் டில் இருந்து வருகை தந்த உலக புகழ் பெற்ற ஓவியர் மு.பத்மவாசனுக்கு அம்பாறை மாவட்டத்தில் பெரும் கௌரவம் வழங்கப்பட்டிருக்கிறது.

காரைதீவு விபுலானந்தா ஞாபகார்த்த பணிமன்றத்தால் "ஓவிய வித்தகர்" என்ற விருதும், தம்பிலுவில் திருநாவுக்கரசு நாயனார் குருகுல சமூகத்தால் 'ஓவிய சாகரர்' என்ற விருதுகள் வழங்கி ஏகப்பட்ட பொன்னாடைகள் போர்த்தப்பட்டு பெரும் கௌரவம் வழங்கப்பட்டிருக்கின்றது.

இந்த நிகழ்வு காரைதீவு சுவாமி விபு லானந்த மணிமண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

அங்கு ஆன்மீக அதிதிகளாக சிவசிறி சண்முக மகேஸ்வர குருக்கள் சிவசிறி சாந்ததரூபன் ஆகியோர் வேதபாராயணம் ஓதி ஆசி வழங்கினர். முன்னதாக நாவலர் பெருமானின் திருவுருவச் சிலைக்கு ஓவியர் பத்மவாசன் உருத்திராட்ச மாலை அணிவித்து வணங்கினார். பின்னர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு அவரது இல்லத்தில் விசேட பூஜையும் இடம் பெற்றது.

கௌரவிப்பு நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வே.ஜெகதீசன், காரைதீவு பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன், உதவி பிரதேச செயலாளர் க.சதிசேகரனம்ன், மணிமண்டப முன்னாள் தலைவர் வி.ரி.சகாதேவராஜா, மணிமண்டப உபதலைவர் சோ.ஸுரநுதன், தம்பிலுவில் திருநாவுக்கரசு நாயனார் குருகுல பணிப் பாளர் கண இராஜரெத்தினம் உள்ளிட்ட அதிதிகளும் கலந்து சிறப்பித்தனர்.

இதற்காக சகல ஏற்பாடுகளையும் இந்து கலாச்சார திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் அருளானந்தம் உமா மகேஸ்வரனின் வழிகாட்டலில் அம்பாறை மாவட்ட இந்து கலாச்சார உத்தியோ கத்தர் கு. ஜெயராஜி மேற் கொண்டிருந் தார்.

கடந்த ஒரு வார காலமாக ஓவியர் பத்மவாசன் மட்டக்களப்பு பட்டிருப்பு காரைதீவு சேனைக் குடியிருப்பு நாவிதன் வெளி திருக்கோவில் தம்பிலுவில் போன்ற பகுதிகளுக்கு விஜயம்செய்து அறநெறி மாணவர் ஆசிரியருக்கு ஓவிய பயிற்சி பட்டறையை நடத்தியதுடன் இந்து சமய விளக்க உரையும் நிகழ்த்தியிருந்தார்.

அவர் செல்லும் இடமெல்லாம் கூறியதாவது..

இறைவன் நமக்கு அளித்த பரிசுகள் இந்த கலைகள். கலைகளை மதிக்காதே நாடு உருப்படாது. கலைஞர்களை மதிக்காத நாடு முன்னேற முடியாது. கலைகளிலேயே இசைக்கலை முக்கியத்துவம் வாய்ந்தது. உயர்ந்தது. நான் ஓவியராக இருந்த போதிலும் இசையை உயர்ந்த ஸ்தானத்தில் வைத்து பார்க் கிறேன். ஆறுமுகநாவலரும் சுவாமி விவேகானந்தரும் தமிழர்களுக்கு இரு கண்கள். அவர்களை நினைத்து வழி பட்டால் சைவமும் தமிழும் மேலும் தழைத்தோங்கும். நாமும் பிரகாசிப்போம்.

கிழக்கு கரை யோரம் வளமுள்ள பசுமையான பிரதேசம். பார்க்க பார்க்க மகிழ்ச்சியாக உள்ளது. வாழ்ந்தால் இங்கு தான் வாழவேண்டும். என்றார். சேனைக்குடியிருப்பிலும் திருக்கோவிலிலும் நாவலர் வீதியையும் அவர் திறந்து வைத்தமை குறிப்பிடத்தக்கது.

# சீ.டி. கடை என்ற பெயரில் மாவா விற்றவர் சிக்கினார்

## பாண்டிருப்பு பிரதான வீதியில் சம்பவம்




சினிமா இறுவெட்டு (சீ.டி.) கடை என்ற போர்வையில் பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதை தரும் மாவா விற்பனையில் ஈடுபட்ட சந்தேக நபரை கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாண்டிருப்பு பிரதான வீதியில் உள்ள சினிமா இறுவெட்டு (சீடி) கடை ஒன்றில் சந்தேகத்திற்கிடமாக இளைஞர்கள் ஒன்று கூடுவது தொடர்பில் ஞாயிற்றுக்கிழமை இரவு விசேட அதிரடிப்படையினருக்கு தகவல் ஒன்று கிடைத்தமைக்கமைய இச்சோதனை நடவடிக்கையை கல்முனை விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்டனர்.

இதன் போது இறுவெட்டு கடை என்ற போர்வையில் போதை தரும் மாவா விற்பனையில் சூட்சுமமாக ஈடுபட்ட கண்டி மாவட்டம் மடவளை பகுதியை சேர்ந்த 25 வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளமையுடன், சந்தேக நபர் வசம் இருந்து மாவா போதைப் பொருள் அடங்கிய பக்கெற்றுக்கள் மீட்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணையை முன்னெடுத்த பின்னர் இளைஞனினால் நடத்தி செல்லப்பட்ட கடையில் மறைத்து வைக்கப்பட்ட தடை செய்யப்பட்ட மாவா போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டது.

கைது செய்யப்பட்ட நபர் சான்று பொருள்களுடன் பெரிய நீலாவணை பொலிஸாரிடம் நீதிமன்ற நடவடிக்கைக்காக பாரப்படுத்தப்பட்டார். விசேட அதிரடிப்படையினர் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளனர்.

இதன் போது கைது செய்யப்பட்ட நபரிடம் இருந்து ஒரு கிலோ 440 கிராம் மாவா போதைப் பொருள் மற்றும் மாவாவிற்கு கலக்கப்படும் இரசாயன ரின் 18 உம் மீட்கப்பட்டுள்ளன எனக் கல்முனை விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. கைதான சந்தேக நபரை கல்முனை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த பெரிய நீலாவணை பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். இது தவிர, மாவாவை நுகர்வுக் காகத் தமது கையிருப்பில் வைத்திருந்த நிலையில் இளைஞர்கள் சிலரும் கைது செய்யப்பட்டுள்ளமையுடன் கைது செய்யப்பட்ட இளைஞர்களிடம் மாவா கொள்வனவு செய்தமை தொடர்பில் மேலதிக விசாரணைகளையும் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஒழுக்கத்துடன் விளையாட்டுத்துறையை முன்னெடுப்பதே மேம்பாட்டுக்கு உதவும்

## காரைதீவு பிரதேச செயலர் அறிவுரை






(வேதசகா)

ஒழுக்கத்துடன் கூடிய கல்வி சிறப்பானது. அதுபோல ஒழுக்கத்துடன் கூடிய விளையாட்டு சிறப்பானது. அது அவசியமாகும்.

-இவ்வாறு காரைதீவு விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய காரைதீவு பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன் குறிப்பிட்டார்.

கிழக்கின் பழம்பெரும் கழகமாம் காரைதீவு விளையாட்டுக்கழகத்தின் வருடாந்த பொதுக் கூட்டமானது கழகத் தலைமையகத்தில் கழகத் தலைவர் வெ.அருட்குமரன் தலைமையில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது . அதிதிகளாக கழகப் போசகர்களான பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன், உத்தரவு பெற்ற நில அளவையாளர் வே.இராஜேந்திரன், உதவிக் கல்விப்பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா மற்றும் டாக்டர்.ம.ரமணன், காரைதீவு பிரதேச சபை செயலாளர் அ.சுந்தரகுமார், தர்மகத்தா இ.திருநாவுக்கரசு ஆகியோர் கலந்துகொண்டனர் .

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஏதாவது பிரச்சினைகள் ஏற்படும் போது அவற்றை ஆரம்பத்திலேயே கண்டறிந்து தீர்த்துக் கொள்ள வேண்டும். தாமதித்தால் விளைவு விபரீதமாகும். – என்றார். கழகச் செயலாளர் ச.கிரிசாந்த் ஆண்டறிக்கையைச் சமர்ப்பிக்க, நிதிச் செயலாளர் அ.பிரேமானந்த் கடந்தகால நிதி அறிக்கையை சமர்ப்பித்தார் .

இதன்போது 2023ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. புதிய தலைவராக ரி.தவக்குமார், செயலாளராக எஸ்.கிருசாந்த், பொருளாளராக எ.பிரேமானந்த் உள்ளிட்ட புதிய நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டது . தொடர்ந்து கழக இரவு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு




# யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் ஆழிப் பேரலை நினைவு அனுஷ்டிப்பு

ஆழிப்பேரலையில் உயிர்நீத்த உறவுகளுக்கான 18 ஆவது ஆண்டு நினைவேந்தல், யாழ். பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கு முன்றிலில் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டது.

இன்று (திங்கட்கிழமை) உயிர்நீத்த உறவுகளின் நினைவுருவ படத்துக்கு அகவணக்கம் செலுத்தி ஈகைசுடரேற்றப்ட்டு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

மேற்படி நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றிய தலைவர் சி.ஜெல்சின், பல்கலைக்கழக மாணவர்கள், ஊழியர்கள், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# யாழ். உடுத்துறையில் சுனாமி நினைவேந்தல்!



சுனாமி ஆழிப்பேரலையால் உயிரிழந்தவர்களின் 18 ஆவது ஆண்டு நினைவு நாடெங்கிலும் இன்று காலை உணர்வுபூர்வமாக நடைபெற்று வருகின்றது.

அந்த நிலையில் இன்று (திங்கட்கிழமை) யாழ். வடமராட்சி உடுத்துறையில் உள்ள சுனாமி பொது நினைவாலயத் தில் உறவுகளால் நினைவு அஞ்சலி அனுஷ்டிக்கப்பட்டது. இதன் போது சுனாமியால் உயிரிழந்தவர்களுக்காக அமைக்கப்பட்ட தூபிக்கு மாலை அணிவிக்கப்பட்டு 9.25 மணிக்கு பொதுச்சுடர் ஏற்றப்பட்டது.

அதனைத் தொடர்ந்து உயிரிழந்தவர்களின் படங்களுக்கு மாலையிட்டு , தீபங்கள் ஏற்றி உணவுகளை படையலிட்டு உறவுகள் அஞ்சலி செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# ஆழிப் பேரலையில் இறந்தவர்களை நினைவுக்கூர்ந்த மலையக மக்கள்!

சுனாமி ஆழிப்பேரலை இடம்பெற்று 18 ஆண்டு நிறைவடைவதை முன்னிட்டு உயிரிழந்த உறவுகளுக்கு மலையக மக்கள் தமது அஞ்சலியை செலுத்தியுள்ளனர்.

இன்று (திங்கட்கிழமை) ஹற்றன் பொலிஸார், நகர வர்த்தகர்களின் ஏற்பாட்டில் ஹற்றன் புத்தர் சிலைக்கு முன்னால் இந்த அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதன்போது உயிர்நீத்த இலங்கை உறவுகளுக்கு அஞ்சலியை மலையக மக்களும் செலுத்தினர்.

இந்த நிகழ்வுகளில் ஹற்றன் நகரில் உள்ள வங்கி ஊழியர்கள், நகர வர்த்தகர்கள், சாரதிகள் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், பொது மக்கள் என அனைவரும் இதில் கலந்து;கொண்டனர்.

# யாழ்.மாவட்ட செயலகத்தில் தேசிய பாதுகாப்புத் தினம்!




அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஏற்பாட்டில் இன்றைய தினம் நாடு பூராகவும் தேசிய பாதுகாப்பு தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

அந்த நிலையில் இன்று (திங்கட்கிழமை) 'முறையான விழிப்புணர்வுடன் விழிப்பாக இருப்பதன் மூலம் அனர்த்த அபாயத்தைக் குறைத்துக்கொள்வோம்' எனும் தொனிப் பொருளின் கீழ் யாழ். மாவட்ட செயலகத்தில் தேசிய பாதுகாப்பு தினம் முன்னெடுக்கப்பட்டது.

மேற்படி தேசிய பாதுகாப்பு தின நிகழ்வில் 2004 ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தத்தின் போது உயிரிழந்த உறவுகளுக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நாட்டில் எரிபொருள்களின் விலைகள் அடுத்துவரும் மாதங்களில் குறையும்?

உள்நாட்டில் எரிபொருள் விலை அடுத்த சில மாதங்களில் குறைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உக்ரைன்மீதானரஷ்யாவின்படையெடுப்பை அடுத்து கச்சா எண்ணெய் விலை கணிசமாக அதிகரித்தது.

இருப்பினும்தற்போதுசர்வதேசசந்தையில் விலை குறைந்துள்ள நிலையில், அடுத்த சில மாதங்களில் விலை மேலும் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை நாட்டில் எரிபொருளுக்கான நாளாந்த தேவை குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எரிபொருள்விநியோகத்தைமட்டுப்படுத்தும் கியு.ஆர். குறியீட்டு முறை மற்றும் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி என்பன தேவை குறைவதற்குக் காரணம் எனத் தெரிவித்துள்ளது.



# நாட்டில் சீரற்ற காலநிலை காரணமாக 3 மாவட்டங்கள் முழுமையாக பாதிப்பு!

சீரற்ற காலநிலை காரணமாக நாட்டின் 3 மாவட்டங்களில் 1500 இற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய மாத்தளை, கண்டி மற்றும் அம்பாறை மாவட்டங்களில் 346 குடும்பங்களைச் சேர்ந்த 1,511 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை சீரற்ற காலநிலை காரணமாக 66 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதோடு இருவர் உயிரிழந்துள்ளதுடன் மூவர் காயமடைந்துள்ளனர்.

மேலும் காற்றழுத்த தாழ்வு நிலை வலுவிழந்து குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறி இலங்கையின் மேற்கு கரையை நோக்கி நகர்வதாக வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

# ஆயுர்வேத பரம்பரை வைத்தியர்களுக்கு திருகோணமலையில் விசேட செயலமர்வு





(அபு அலா)

திருகோணமலை மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத ஆயுள்வேத பரம்பரை வைத்தியர்களுக்கான ஒருநாள் செயலமர்வு கடந்த திருகோணமலை முதலமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி (திருமதி) இ.ஸ்ரீதர் தலைமையில் இடம்பெற்ற இச்செயலமர்வில் சுகாதார அமைச்சின் சுதேச மருத்துவ அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் பி.தயானந்தன், கொழும்பு ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்தியர்களான ரி.சிவகுமார், லலித் அலவத்கொட, கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள திட்டமிடல் பிரிவின் வைத்தியர்களான எஸ்.சிவச்செல்வன், எஸ்.சதீஸ் உள்ளிட்ட வைத்தியர்கள் பலர் கலந்துகொண்டனர்.

இச்செலமர்வில் பரம்பரை வைத்தியர்கள் தொடர்பான சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுக்க நெறிமுறைகள் பற்றி இடம்பெற்றது.

குறிப்பாக, நோயாளர்கள் தொடர்பாகக் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள், தொழில் தொடர்பாகவும் அதே தொழிலில் ஈடுபட்டுள்ள சக வைத்தியர்கள் தொடர்பாக கடைப்பிடிக்க வேண்டிய நெறி முறைகள், சமூகம் தொடர்பாக கடைப்பிடிக்க வேண்டிய நெறி முறைகள், சட்டம் மற்றும் நீதி தொடர்பான நெறிமுறைகள் தொடர்பாகவே இச்செலமர்வு இடம்பெற்றது.

பரம்பரை வைத்தியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் பதிவு செய்யும் நடைமுறைகள் பற்றி பரம்பரை வைத்தியர்களினால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு மிக விரிவான விளக்கங்களும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.

கொழும்பு ஆயுள்வேத திணைக்களத்தினால் வெளியீடு செய்யப்பட்ட சித்த மருந்து முறையியல் பதார்த்த விஞ்ஞானம் பகுதி – 1 என்ற நூலை சுகாதார அமைச்சின் சுதேச மருத்துவ அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் பி.தயானந்தனி னால் மாகாண ஆணையாளர், வைத்தியர்கள் மற்றும் பரம்பரை வைத்தியர்கள் ஆகியோருக்கு வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது உயிரிழந்தவர்களுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், நினைவுத் தூபிக்கு மலர்மாலை அணிவித்து, மலரஞ்சலி செலுத்தப்பட்டதுடன் நினைவுப் பேருரைகளும் இடம்பெற்றன.

நிகழ்வில் மாவட்ட அரச அதிபர் பி.ஏ. சரத்சந்திர, மேலதிக அரச அதிபர் தி.திரேஷ்குமார், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மாவட்ட உதவி பணிப்பாளர் ஏ.எம்.ஆர்.கேரத்நா யக்கே , மதகுருமார்கள், இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், நகர சபை, தெற்கு தமிழ் பிரதேச சபை மற்றும் செட்டிகுளம் பிரதேசசபை தவிசாளர்கள், உறுப் பினர்கள், முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் செ.மயூரன், பொது அமைப்பினர், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## திருமலையில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருகோணமலை மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பணிப்பாளர் உட்பட வெருகல் பிரதேச செயலாளர், கிராம சேவகர், சமுர்த்தி உத்தியோகதத்தர் ஆகியோருடன் பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

# இன்று முதல் வானிலை மாற்றம் வளிமண்டலவியல் திணைக்களம்

தாழமுக்க மண்டலம் வலுவிழந்து இன்று (திங்கட்கிழமை) இலங்கையின் மேற்கு கரையை நோக்கி நகரும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக இன்று முதல் நாட்டின் வானிலையில் தாக்கம் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேற்கு மற்றும் வடக்கு மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதுடன், சில இடங்களில் 75 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும்.

அத்துடன், தற்காலிகமாக பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை குறைத்துக் கொள்ள தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.12.2022 இல் வெளியிடப்பெற்றது.